29.12.2021 சி.சி. 169/2012 அ.சா1 திருமதி. ஜெயந்தி

சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

நான் முத்தூட் வங்கியில் 08.04.2006 ல் வேலைக்குச் சேர்ந்தேன். நான் முதலில் குளச்சல் கிளையில் வேலைக்குச் சேர்ந்தேன். பின்னர் 2010ம் வருடம் ஆலஞ்சி கிளைக்கு பணி மாறுதல் ஆனது. ஆலஞ்சிக்கிளையில் நான் துணை மேலாளர் பொறுப்பில் இருந்தேன். சம்பவ காலகட்டத்தில் நான் மேலாளர் பொறுப்பிலும் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் துணை மேலாளர் பொறுப்பில் இருந்ததாக சொல்லியுள்ளேன். மேலாளர் பதவியும் துணை மேலாளர் பதவியும் இரண்டு வெவ்வேறு பதவி நிலைகள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தில் ஆலஞ்சி கிளையில் வேறு மேலாளர்கள் கிடையாது. எதிரி முதலில் ஆலஞ்சி கிளையில் வேலைப் பார்த்தார். அவர் அந்த வேலைக்கு வரும்போது நான் தான் ஆலஞ்சி கிளையில் பொறுப்பில் இருந்தேன். அவருக்கு மாத ஊதியம் ரூபாய் 8,000 ஆகும். எதிரி ஒருவருடம் பணியாற்றததால் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. நான் நேரடியாக குளச்சல் காவல்நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை. குளச்சல் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் நடந்த விவரத்தை எழுதியிருப்பார்கள். புகார் மனுவை நான் படித்துப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சேர்ந்து தான் சென்றோம். புகார் மனுவில் எங்களுடைய நிறுவனத்தில் பணிபுரியும் யார் மீது சந்தேகம் உள்ளது என்பது குறித்து குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரியின் பெயரோ, அவர் மீது சந்தேகம் இருப்பதாகவோ புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வேறு எவர் மீதும் சந்தேகம் இருப்பதாக புகாரில் சொல்லப்பட்டிருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார் மனு 18.03.2011 தேதியில் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனுவில் நான் புகார்தாரர் கிடையாது. புகார்தாரர் முத்துக்குமார் ஆலஞ்சியின் கிளையின் மேலாளர் கிடையாது என்றால் சரிதான். மேற்படி முத்துக்குமார் ஆலஞ்சிக் கிளையில் பணிபுரிபவர் அல்ல என்பதால் அவருக்கு ஆலஞ்சி கிளையின் அன்றாட நிகழ்வுகள் தெரியாது என்றால் சரிதான். அடகு வைக்கப்படும் நகைகள் லாக்கரில் தான் வைக்கப்படும். லாக்கருக்கு 7 சாவிகள் உண்டு. டோர் திறப்பதற்கு 3 சாவிகளும், உள்ளே உள்ள லாக்கரை திறப்பதற்கு 4 சாவிகளும் உண்டு. இந்த சாவிகள் அனைத்தும் எனது கைவசம் தான் இருக்கும். நான் இல்லை என்றால் பொறுப்பில் இருக்கும் நபரிடம் இருக்கும். சம்பவ தினத்தன்று மேற்படி சாவிகள் சுனில் மேக்கிளின் ராஜா என்பவரிடம் இருந்தது. மேற்படி சாவிகள் எந்த சூழ்நிலையிலும் ஆஜர் எதிரியிடம் செல்வதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். 08.03.2011 அன்று நாகர்கோவிலுக்கு மீட்டிங் செல்லும் போது மேற்படி சுனில் மேக்கிளின் ராஜா நகைகளை சரிபார்த்து என்னிடமிருந்து லாக்கர் சாவிகளை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். 08.03.2011 அன்று நான் மீட்டிங் முடிந்து திரும்பவும் கிளைக்கு வரவில்லை. 09.03.2011 அன்று காலையில் நான் லாக்கர் சாவிகளை பெற்றுக்கொண்டேன். நகைகள் காணாமல் போன விவரம் எனக்குத் தான் முதலில் தெரியும். எனக்கு நகைகள் காணாமல் போனது குறித்து தெரிந்ததும் மேற்படி சுனில் மேக்கிளின்

ராஜாவிடம் முதலில் சொன்னேன். எனக்கு நகைகள் காணாமல் போனது குறித்து 09.03.2011 அன்று மதிய வேளையில் தெரியும். நான் உடனடியாக மேலதிகாரிகளுக்கு தகவல் சொன்னேன். காவல்நிலையத்திற்கு நான் தகவல் சொல்லவில்லை. மண்டல மேலாளர் முத்துக்குமார் என்பவர் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னார். 09.03.2011 அன்றே காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டார். நாங்கள் உடனே நகைகளை தேடினோம். மேற்படி மண்டல மேலாளர் முத்துக்குமார் என்பவரும் வந்து தேடினார். நகைகள் தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி விவரத்தை புகார் மனுவில் சொல்லியுள்ளோம். புகாரில் எங்களால் ஒரு குறிப்பிட்ட நபரை அடையாளம் காட்டவும் முடியவில்லை என்று சொல்லியுள்ளோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் தொடக்கத்தில் ஓரமாக 14.03.2011 என்று தேதியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்மனுவில் திருடு போன நகைகளின் பெயர்கள் தனித்தனியாக குறிப்பிடவில்லை. ஆஜர் எதிரிக்கு பணிக்கொடை, பிராவிடண்ட் பண்ட் முதலிய சலுகைகள் உண்டு. ஆஜர் எதிரியிடமிருந்து பணியில் சேரும்போது செக்கியூரிட்டிக்காக முன்பணம் எதுவும் பெறப்படவில்லை. ஆஜர் எதிரியின் அசல் கல்வி சான்றிதழ்கள் அலுவலகத்தில் வாங்கி வைத்துள்ளார்கள். மேற்படி அசல் கல்வி சான்றிதழ்கள் தற்போதும் அலுவலகத்தில் தான் உள்ளன என்றால் சரிதான். எதிரிக்கு விடுமுறை சலுகைகளும் உண்டு. ஆஜர் எதிரி 11.03.2011 ம் தேதியில் இருந்து எங்களது கிளைக்கு வேலைக்கு வரவில்லை. அவர் கொத்தனார் வேலை பார்க்க சென்றுவிட்டார் என்றால் சரிதான். கொத்தனார் வேலை பார்ப்பவர்களுக்கு தினசரி ரூபாய் 1,000 சம்பளம் கிடைக்கும் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் ஆஜர் எதிரி எந்த தேதியில் இருந்து வேலைக்கு வரவில்லை என்று கேட்டார்கள். நான் சொன்னேன். போலீசார் எங்களிடம் Pledge form xerox வாங்கினார்கள். வேறு ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை. ஆஜர் எதிரி எங்கள் நிறுவனத்தில் கடைநிலை ஊழியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவருக்கு பண பரிவர்த்தனையிலோ, நகைகள் அடமானம் குறித்த நடவடிக்கையிலோ எந்தவித பங்கும் கிடையாது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் மண்டல மேலாளர் தான் புகார் அளித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மண்டல மேலாளர் புகார் அளிக்கும் போது நான் உடனிருக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும் போது 27.08.2010லிருந்து கிளை மேலாளராக நான் இருந்து வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்களுடன் அப்போது ஆலஞ்சி கிளையில் திஜா ரெல்மா என்பவரும் பணியாற்றி வந்தார். திஜா ரெல்மாவிற்கு நகைகளை எடைபோட்டு பணம் கொடுப்பது சம்மந்தப்பட்ட வேலை அலுவலகத்தில் வழங்கப்பட்டிருந்தது. நான் சம்பவ தேதியில் மேற்படி நிறுவனத்தின் கிளையின் மேலாளராக இல்லை என்றால் சரியல்ல. நான் மேலாளராக உண்மையிலேயே பதவி வகித்திருந்தால் சம்பவம் நடந்தவுடன் நான் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. திருடு போன நகைகளை எந்நெத்த வாடிக்கையாளர்கள் அடமானம் வைத்திருந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியும். வாடிக்கையாளர்களுக்கு பின்னர் வங்கியில் இருந்து அவர்கள் பிரச்சினை செய்ததால் புது நகைகளை வங்கி செலவிலேயே வாங்கிக் கொடுத்துவிட்டோம். நான் வங்கி செலவில் வாங்கிக் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருடுபோனதாக கூறப்படும் நகைகளை நாங்கள் நீதிமன்றத்தில் இருந்து திரும்ப

பெற்றுக்கொண்டோம். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருட்டு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை பணியிடை நீக்கம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் அவர் அலுவலகத்திற்கு வராததால் எடுக்கவில்லை. எதிரி அதிக சம்பளத்திற்காக கொத்தனார் வேலைக்கு சென்றதால் அவர் மீது வெறுப்புக் கொண்டு பொய்யாக வழக்குப் பதிவுச் செய்யப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

29.12.2021 சி.சி. 169/2012 அ.சா6 திரு. சுந்தர்சிங்

சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

நான் தற்போது திங்கள் நகர் டாஸ்மார்க்கில் பணியாற்றி வருகிறேன். நான் 19 ஆண்டுகளாக டாஸ்மார்க்கில் பணி செய்து வருகிறேன். எனக்கு ஷீப்ட் டியூட்டி கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பணி உண்டு. சம்பவம் நடந்த சமயத்திலும் நான் திங்கள் நகரில் தான் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை டாஸ்மார்க்கில் பணிபுரிந்து வந்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் காலையில் பணிக்கு வருவது முதல் கடை அடைக்கும் வரை கடையில் தான் இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எங்களுக்கு வருகை பதிவேடு உண்டு. வருகைப்பதிவேட்டில் கையெழுத்திட்ட பிறகு கடை அடைப்பது வரை நாங்கள் கடையில் தான் இருக்கவேண்டும் என்றால் நாங்கள் எங்களுக்குள் அனுசரித்து வெளியே சென்று வருவோம். மேற்படி நாங்கள் அனுசரித்து செல்வது சட்டவிரோதம் என்றாலும் பணி ஒழுங்கின்மை என்றாலும் சரியல்ல. போலீசார் தயார் செய்த பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் எனது மனைவியான அ.சா1ஐ தினசரி வங்கியில் இருந்து அழைத்து வரமாட்டேன். எனது மனைவி இருசக்கர வாகனத்தில் செல்லாத நாட்களில் நான் அழைத்து வரச் செல்வேன். நான் பணியில் இருக்கும்போது எனது மனைவியை அழைத்து வரமுடியாது என்றால் நான் அனுமதி வாங்கிவிட்டு செல்வேன். 19.03.2011ம் தேதி மாலை 6.30 மணிக்கு நான் பணியில் இருந்த காரணத்தினால் சம்பவயிடத்திற்கு செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் வைத்து பார்வை மகசரில் கையொப்பமிடவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி முத்தூட் நிறுவனத்தில் பணிபுரியும் காரணத்தினால் நான் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக கையொப்பமிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.